***வாரம் 3 (17-23 அக்டோபர் 2021): வெற்றியின் கொடியை ஏற்றுவோம் (சங்கீதம் 20: 1-3)***

*உங்கள் போதகர்கள் மற்றும் தலைவர்களின் மேம்பட்ட சுவிஷேச ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்*

*17 அக்டோபர் 2021 உங்கள் போதகர்களும் தலைவர்களும் தங்களின் தற்போதைய சுவிஷேச ஊழியங்களில் நிறைவு காண பிரார்த்தியுங்கள். அவர்கள் தங்கள் தூரநோக்குப் பார்வை மற்றும் வலிமையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் தங்கள் ஊழியத்தில் எப்பொழுதும் கழுகுகளைப் போல உயரவும் பிரார்த்தனை செய்யுங்கள்.*

*18 அக்டோபர் 2021 உங்கள் போதகர்கள் மற்றும் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றும் சுவிஷேச குழுக்கள் பிரிவுபடாத இதயத்துடனும், பெறுமையுடனும் ஒரே திசையில் செல்ல வேண்டும் எனப் பிரார்த்தனை செய்யுங்கள்.*

*19 அக்டோபர் 2021 கர்த்தருக்காக உங்கள் போதகர்கள் மற்றும் தலைவர்கள் செய்யும் ஒவ்வொரு தியாகத்தையும் அவருக்குப் பிரியமான வாசனையாகவும் அவர் ஏற்றுக் கொள்ளவும் பிரார்த்தனை செய்யுங்கள். கர்த்தர் உண்மையில் ஒவ்வொரு தகனபலிகளும் பலரை ஆசீர்வதிக்கும் ஒன்றாக மாற்றுவார்.*

*20 அக்டோபர் 2021 உங்கள் போதகர்கள் மற்றும் தலைவர்கள் ஊழியங்களில் எதிர்கொள்ளும் தேக்கநிலை அல்லது தடைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட பிரார்த்தியுங்கள். அவர்கள் பாலைவனம் அல்லது வனப்பகுதியின் அனுபவங்களை அனுபவித்தாலும் அவர்களிடையே ஏராளமான மகிழ்ச்சி தங்கியிருக்க ஜெபியுங்கள்.*

*21 அக்டோபர் 2021 உங்கள் போதகர்கள், தலைவர்கள் தங்கள் சபைகளைத் தெரியாத பருவங்கள் மற்றும் எதிர்காலத்தை நோக்கி வழிநடத்தும் போது தெய்வீக ஞானம் மற்றும் தைரியத்தால் நிரப்பப்படப் பிரார்த்தியுங்கள்.*

*22 அக்டோபர் 2021 உங்கள் போதகர்கள், தலைவர்கள் இயேசுவை முன் உதாரணமாகத் தங்களின் தலைமைத்துவ வாழ்க்கை முறையில் பின்பற்ற ஜெபியுங்கள். இதன் தொடர்பில் கடவுளின் மந்தையை மேய்த்து, அவருக்காகச் சீடர்களை உருவாக்கும் போது அவர்கள் இயேசுவின் இதயத்தைக் கொண்டிருப்பார்கள்.*

*23 அக்டோபர் 2021 உங்கள் போதகர்கள் மற்றும் தலைவர்கள் தங்கள் ஊழியங்களில் கர்த்தரின் விருப்பத்தையும் திசையையும் தேடும் போது, அதனைத் தொடரும் அடுத்த தலைமுறைக்கான வாரிசுகளை வளர்க்கவும் திட்டங்களை வகுக்கவும் ஜெபியுங்கள். இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தொடங்கப்பட்ட ஒன்று கர்த்தரின் பிரசன்னத்துடன் ஆற்றல் வாய்ந்த முறையில் நிறைவேற்றப்படும்.*